மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படி நிகழ்ச்சிகள் இருந்திருக்குமானால் அது சம்பந்தமாகக் காவல் துறையினர் நடவடிக்கை மேற்கொண்டிருப்பார்கள்.

திரு. நா. வீராசாமி : தேர்தல் காலத்தில் கொலையுண்டவர் களுக்கு அரசாங்கத்திலிருந்து நிதி ஒதுக்குவதைப்பற்றிச் செயற் குறிப்பு இல்லை என்றாலும், முதலமைச்சருடைய நிதியிலிருந் தாவது கொடுத்து அந்த ஏழைக் குடும்பங்களைக் காப்பாற்ற முதலமைச்சரவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கொலையுண்ட கழகத் தொண்டர்களின் குடும்பத்தினருக்கு கழகத்தின் சார்பிலே நிதி உதவிகள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இது சம்பந்தமான வழக்குகள் எல்லாவற்றிலும் சார்ஜ் ஷீட் கொடுக்கப்பட்டதா, விசாரணை துவங்கி இருக்கிறதா என்ற விவரம் அமைச்சரவர்கள் கூறுவார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நான் நேற்றே அதைப் பற்றி போலீஸ் மானியத்தின் மீது பேசும்போது குறிப்பிட்டிருக் கிறேன். ஒன்றிரண்டைத் தவிர மற்ற எல்லா வழக்குகளிலும் சார்ஜ் ஷீட் கொடுக்கப்பட்டு, வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

திரு. ஜே. ஜேம்ஸ் : கழிந்த தேர்தல் நேரத்தில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் கொலையுண்டார்கள் என்பதை முதலமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் ஐந்து பேரும், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் மூன்று பேரும் கொலையுண்டார்கள்.

Provision of uniforms to boys in Harijan Hostels.

* 88 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether there is any proposal to provide uniforms to the boys in the Harijan Hostels of the State; and

(*b*) if so, when they will be provided ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :

(அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

THIRU B. VENKATASWAMY : Sir, if the Government provide uniform for boys and girls living in the hostels, it will create a sense of discipline and equality among the boys and girls. So, will the Government come forward to provide uniforms to the Harijan boys and girls who are living in the hostels?

1971 ஜூலை 20]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஹாஸ்டலில் தங்கிப் பயிலுகின்ற மாணவ, மாணவியர்களுக்கு இப்பொழுது ஜாதி வித்தியாசம் பாராட்டாமல் உடைகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் அரிசன நலத்துறைப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்குத்தான்—வெறும் மாணவர்களுக்கு மட்டும்—கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. சு. துரைசாமி : அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொன்னார்கள். இனிமேலாகிலும் அரசாங்கமே முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : பரிசிலனை செய்யலாம்.

Educational tours for Boys and Girls of Harijan Hostels

* 89 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state whether there is any proposal to arrange educational tours for Harijan boys and girls residing in Government Harijan Hostels in Tamil Nadu?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அரசு கலை-கைத்திறப் பணிக் கல்லூரியில் (Government College of Arts and Crafts) படிப்பவர்களும், சென்னை-7-ல் உள்ள தொழில் கல்வி மாணவர்களுக்கான அரசு விடுதியில் (அரிசன நலத் துறை) தங்கியிருப்பவர்களுமாகிய மாணவர்கள் கட்டிடக் கலை—கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்குக் கல்விச் சுற்றுலாக்கள் மேற்கொள்கையில் அரசு அம்மாணவர்களுக்குத் தற்போது தனி மானியங்கள் வழங்க ஒப்பளிப்பு வழங்குகின்றது. இச் சுற்றுலாக்கள் அவர்களுக்குரிய பாடத் திட்டத்தில் ஒரு பகுதியாக அமைந்திருப்பதே அதற்குக் காரணமாகும். மேற்சொன்ன விடுதியில் தங்கியிருப்பவர்களைத் தவிர தமிழ் நாட்டில் உள்ள அரசு அரிசன விடுதிகளில் தங்கியிருக்கும் மாணவ, மாணவியர்க்குக் கல்விச் சுற்றுலாக்கள் ஏற்பாடு செய்யும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

THIRU *B. VENKATASWAMY*: Harijans are economically very poor. According to the answer given by the Hon. Minister some sections of boys and girls are being taken on tours to other areas. Will the students living in these hostels and in high schools also be taken on tour so as to improve their knowledge and education?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அரிசன நலத்துறைப் பள்ளியில் பயிலும் மாணவர்களையே இப்படிப்பட்ட சுற்றுலாக்களுக்கு அழைத்துச் செல்வதாக இருந்தது. இப்போது அந்தத் திட்டம் இல்லை. பின்னர் எடுத்துக்கொள்ளலாம்.